ஸுலை இஸ்லாமிய அழைப்பு நிலையம்

# நல்லடியார்கள் மற்றும் இறைநேசர்கள் மூலம் அல்லாஹ்விடம் நெருங்குதல் விளக்கமும், சட்டமும்



தொகுப்பு
சனசமூகப் பிரிவு, ஸுலை இஸ்லாமிய அழைப்பு நிலையம்

TAMIL

1301057

# நல்லடியார்கள் மற்றும் இறைநேசர்கள் மூலம் அல்லாஹ்விடம் நெருங்குதல் விளக்கமும், சட்டமும்

தொகுப்பு :
ஸுலை இஸ்லாமிய அழைப்பு நிலையம்

தமிழில்:
மௌலவி :எம். யூ. எம் இல்ஹாம்
(அபூ அப்தில்லாஹ்)

மீள்பார்வை:
மௌலவி :தஸ்தீக் அப்துல் கரீம் (மதனி)

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால். எல்லாப் புகழும் ஏகனான அல்லாஹ்வுக்கே. கருணையும் சாந்தியும் இறுதி நபி முஹம்மத் ﷺ அவர்கள் மீது உண்டாவதாக.

இக்காலத்தில் முஸ்லிம்களில் அதிகமானோர் அல்லாஹ்வின் கட்டளைகளை விட்டுத் தூரமானதாலும், அவர்களின் மார்க்கமான தீனுல் இஸ்லாத்தை தெளிவாக அறிந்து கொள்ளாமையினாலும் இணைவைத்தல், நூதன செயல்களை பின்பற்றுதல் மற்றும் கட்டுக்கதைகளை நம்புதல் போன்ற செயற்பாடுகள் அவர்களுக்கு மத்தியில் அதிகரித்துள்ளன.

இவ்வாறு முஸ்லிம்கள் மத்தியில் பரவியிருக்கும் செயற்பாடுகளில் ஒன்று அவர்களில் சிலரை சில முஸ்லிம்கள் அவ்லியாக்கள் (இறைநேசர்கள்), ஸாலிஹீன்கள் (நல்லடியார்கள்) என பெயர்சூட்டி, அவர்களை கண்ணியப்ப டுத்தி, அல்லாஹ்வையன்றி அவர்களிடம் பிரார்த்தித்து, அவர்கள் நலவுகளும், கெடுதிகளும் செய்யச் சக்தியுள்ளவர்கள் என உறுதியாக நம்பிக்கை கொள்கின்றனர் என்பதாகும். இதன் காரணத்தால் இவர்கள் அவர்களை கண்ணியப் படுத்துவற்காக அவர்களின் கப்றுகளைச் சுற்றி வலம்வருவதோடு இச்செயல் மூலம் தேவைகள் நிறைவேற்றப்படுவதற்கும், துன்பங்கள் அகற்றப்படுவற்கும் அவர்கள் மூலம் இவர்கள் நெருங்குவதாகவும் (வஸீலாத் தேடுவதாகவும்) கருதுகின்றனர்.

அறியாத இம்மக்கள் அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவின் பக்கம் சென்று பிரார்த்தனை, வஸீலா குறித்து அவைகளில் வந்திருக்கும் விடயங்களை விளங்கியிருப்பார்களாயின் மார்க்கம் அனுமதித்த உண்மையான வஸீலா என்னவென அறிந்திருப்பார்கள்.

நிச்சயமாக மார்க்கம் அனுமதித்த உண்மையான நெருங்குதல் என்பது வழிபாடுகளை புரிந்து, ஹராமான விடயங்களைத் தவிர்ந்து, அல்லாஹ்வுக்கு வழிப்படுவதோடு, அவன் தூதர் ﷺ அவர்களையும் வழிபடுவதன் மூலம் உண்டாகும். மேலும் நற்கருமங்களைக் கொண்டும் அல்லாஹ்வின் அழகிய திருநாமங்கள், அவனின் உயர் பண்புகள் கொண்டும் அவனிடம் பிரார்த்திப்பதன் மூலம் உண்டாகும். இதுதான் அல்லாஹ்வின் பக்கம் நெருங்குவதற்குரிய சாதனமும், அவனின் அருள், அவனின் திருப்தியின் பக்கம் கொண்டு செல்லும் வழியுமாகும்.

தேவைகள் நிறைவேற்றப்படுவதற்கும், துன்பங்கள் அகற்றப்படுவதற்கும் மரணித்தவர்களின் கப்றுகளின் (தர்ஹாக்களின்) பக்கம் ஒதுங்கி உதவி தேடுவது, அவைகளைச் சுற்றி வலம் வருவது, அவைகளில் உள்ளவர்களுக்கு நேர்ச்சைகளைச் செய்வது, அவர்களின் வாசற்படிகளில் வீழ்ந்து கிடப்பது போன்றவைகளினூடாக அல்லாஹ்வின் பக்கம் நெருங்குவதென்பது நிச்சயமாக மார்க்கம் அனுமதித்த நெருங்குதல் அல்ல. மாறாக இது இணைவைத்தலும், நிராகரிப்புமாகும்.

அல்லாஹ் பாதுகாக்க வேண்டும் !

சிலர் ஆதரமாகக் கொள்ளும் உமர் இப்னுல் கத்தாப் ﷺ அவர்கள் அப்பாஸ் ﷺ அவர்களைக் கொண்டு (அல்லாஹ்விடம்) நெருங்குவது சம்பந்தமாக வந்துள்ள அறிவிப்பானது உமர் ﷺ அவர்கள் அப்பாஸ் ﷺ அவர்களின் பிரார்த்தனையைக் கொண்டு (அல்லாஹ்விடம்) நெருங்கினார்களே தவிர (நேரடியாக) அப்பாஸ் ﷺ அவர்களைக் கொண்டு நெருங்க வில்லை. மனிதர்களின் பிரார்த்தனையைக் கொண்டு (அல்லாஹ்விடம்) நெருங்குவது வேறு, (நேரடியாக) அவர்களைக் கொண்டே நெருங்குவது வேறு. (ஆனால் மனிதர்களின் பிரார்த்தனையைக் கொண்டு நெருங்குவதற்கு) அவர்கள் உயிருடன் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில் உயிருடன் இருப்பவரின் பிரார்த்தனையைக் கொண்டு (அல்லாஹ்விடம்) நெருங்குவது என்பது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட நெருங்குதலின் வகைகளின் ஒன்றாகும். ஆனால் எவரது பிரார்த்தனையைக் கொண்டு நெருக்கம் தேடப்படுகிறதோ அவர் ஒரு (ஸாலிஹான) நல்ல மனிதராக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும்.

பின்னர் எவரது புண்ணியத்தால் அல்லாஹ்விடம் கேட்கவும், அவனிடம் உதவி வேண்டவும் செய்கிறானோ அந்த மரணித்தவர் அவரின் மரணத்துக்குப் பிறகு தனக்கே எதையும் சொந்தமாக்கிக் கொள்ள முடியாதவராகவும், தனக்கு எந்தப் பலனையும் செய்ய முடியாதவராகவும் ஆகிவிட்டார். அவ்வாறாயின் எப்படி

பிறருக்கு பயனளிக்கப் போகிறார் ? மரணித்தவர் தனது அசைவை இழந்து, தனது உறுப்புக்கள் செயலிழந்திருக்கும் நிலையில் தனது மரணத்தின் பின் பிறருக்கு பயனளிப்பது ஒருபுறமிருக்க, தனக்கு பயனளிக்கும் சக்தி பெறுவான் என சீரிய புத்தியுடைய ஒரு மனிதனால் அணுவளவும் ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும். மனிதன் அவன் இறந்த பின் எதையும் செய்வதற்கு சக்தியற்றவன் என நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.

அதற்கு பின்வரும் நபிமொழி ஆதாரமாகும்:

إِذَا مَاتَ ابْنُ آدَمَ انْقَطَعَ عَمَلُهُ إِلاَّ مِنْ ثَلاَثٍ : صَدَقَةٍ جَارِيَةٍ أَوْ عِلْمٍ يُنْتَفَعُ بِهِ أَوْ وَلَدٍ صَالِحٍ يَدْعُو لَهُ ( رواه مسلم )

ஆதமுடைய மகன் மரணித்துவிட்டால் மூன்று காரியங்களைத் தவிர அவனுடைய செயல்கள் முற்றுப் பெற்றுவிடும். (அவை) நிரந்தரமான தருமம், பயன்தரும் கல்வி, அவனுக்காகப் பிரார்த்தனை செய்யும் நல்ல குழந்தை.

(ஆதாரம் : முஸ்லிம்).

இந்த நபிமொழியிலிருந்து விளங்குவதாவது : இறந்தவரோ அவருக்காக பிரார்த்தனை

செய்யவும், அவருக்காக பாவமன்னிப்புத் தேடவும் அவரே தேவையுள்ளவராக இருக்கிறார். எனவே உயிருடன் இருப்பவர் இறந்தவனின் பிரார்த்தனைக்கு தேவையற்றவன் என்பதாகும். இந்த நபிமொழி ஆதமுடைய மகனின் செயல்கள், அவனின் இறப்புக்குப் பின் முற்றுப் பெற்றுவிட்டதாக உறுதிப்படுத்திய பின்பும் இறந்தவர் அவரின் கப்றில் பிறருடன் தொடர்பு வைத்துக் கொள்ளவும், பிறருக்கு எந்த உதவியையும் புரிய முடியுமான வாழ்வொன்றையும் வாழ்வதாக எப்படி நாம் நம்பமுடியும் ? தன்னிடம் இல்லாததை பிறருக்கு கொடுக்க முடியாது என்று இருக்கும் நிலையில் எவ்வாறு நாம் அதனை நம்பிக்கை கொள்ள முடியும் ? மேலும் மரணித்தவரிடம் எவ்வளவு நீண்ட பிரார்த்தனை புரிந்தாலும் அவரால் அப்பிரார்த்தனை புரிபவரின் பிரார்த்தனையை செவியுற முடியாது.

அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் :

﴿ وَالَّذِيْنَ تَدْعُوْنَ مِنْ دُوْنِهِ مَا يَمْلِكُوْنَ مِنْ قِطْمِيْرٍ ۞ إِنْ تَدْعُوْهُمْ لاَ يَسْمَعُوْا دُعَاءَكُمْ وَلَوْ سَمِعُوا مَا اسْتَجَابُوا لَكُمْ وَيَوْمَ الْقِيَامَةِ يَكْفُرُوْنَ بِشِرْكِكُمْ ﴾ فاطر : 13- 14 .

இன்னும், அவனையன்றி நீங்கள் பிரார்த்தித்து அழைக்கின்றீர்களே அத்தகையவர்கள் ஒரு வித்தின் (மேலிருக்கும்) தொலி அளவும் அதிகாரம்

பெறமாட்டார்கள். அவர்களை நீங்கள் அழைத்த போதிலும், உங்களுடைய அழைப்பை அவர்கள் செவியுற மாட்டார்கள், அவர்கள் செவியுற்ற போதிலும் உங்களுக்குப் பதிலளிக்க மாட்டார்கள், மறுமை நாளிலோ நீங்கள் (அவர்களை) இணைவைத்ததையும் அவர்கள் நிராகரித்து விடுவார்கள். (35:13-14)

எனவே மரணித்தவர்களுக்கு எவ்வித அதிகாரமோ, பிரார்த்தனையைச் செவியுறும் ஆற்றலோ கிடையாது என அல்லாஹ் கூறியுள்ளான். மேலும் தனக்கு எதையும் சொந்தமாக்கிக் கொள்ளாதவர் பிறருக்கு கொடுக்க முடியாது, செவியுறும் ஆற்றல் அற்றவர் (பிறரின் பிரார்த்தனைக்கு) பதிலளிக்க சக்தியற்றவரே. மேலும் (பிறர் கூறுவது என்னவென்று) அறியும் ஆற்றல் அற்றவர் என்பன அறிவுபூர்வமாக தெரிந்த காரியமாகும். மேலும் அல்லாஹ்வையன்றி அழைக்கப்படுபவர் யாராக இருந்தாலும் அவரை அழைப்பவருக்கு அவரால் எதையும் நிறைவேற்றிக் கொடுக்கும் ஆற்றலில்லை என இத்திரு வசனம் தெளிவுபடுத்தியுள்ளது.

அல்லாஹ்வையன்றி வணங்கப்படும் ஒவ்வொன்றுக்கும் செலுத்தப்படும் வணக்கம் பயனற்றதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ وَلاَ تَدْعُ مِنْ دُوْنِ اللهِ مَا لاَ يَنْفَعُكَ وَلاَ يَضُرُّكَ فَإِنْ فَعَلْتَ
فَإِنَّكَ إِذًا مِنَ الظَّالِمِيْنَ ۞ وَإِنْ يَمْسَسْكَ اللهُ بِضُرٍّ فَلاَ كَاشِفَ
لَهُ إِلاَّ هُوَ وَإِنْ يُرِدْكَ اللهُ بِخَيْرٍ فَلاَ رَادَّ لِفَضْلِهِ ﴾

يونس: 106−107

இன்னும் அல்லாஹ்வைத்தவிர உமக்கு பயனளிக்காதவற்றை மற்றும் உமக்கு இடர் செய்யாதவற்றை நீர் அழைக்க வேண்டாம் அவ்வாறு செய்வீராயின் நிச்சயமாக அச்சமயமே அநியாயக்காரர்களில் (உள்ளவராக) நீர் ஆகிவிடுவீர். அல்லாஹ் உமக்கு ஒரு இடரை அடையச் செய்தால் அதனை நீக்குகின்றவன் அவனைத்தவிர (வேறு) எவரும் இல்லை மேலும் அவன் உமக்கு யாதொரு நன்மையை நாடினால் அவனது பேரருளை தடுப்பவர் எவருமில்லை. (10:106-107)

அல்லாஹ்வையன்றி வணங்கப்படுபவர்கள் எந்தப் பலனையுமளிக்க மாட்டார்கள், மேலும் எந்த இடரையும் செய்யமாட்டார்கள் என்பதை இத்திரு வசனத்திலிருந்து

அறிய முடிகிறது. அப்படியாயின் இவர்களை வணங்குவது மற்றும் இவர்களிடம் பிரார்த்திப்பதினால் என்ன பலனிருக்கிறது ? நாம் இன்ன கப்றிடம் சென்றோம் அல்லது இன்ன இறைநேசரிடம் பிரார்த்தித்தோம் நாம் நாடியது எமக்குக் கிடைத்தது எனக் கூறும் கட்டுக்கதையாளர்கள் பொய்யர்கள் என நிரூபிப்பதற்குரிய சான்று இதில் உண்டு. அப்படி யார் கூறுகின்றானோ நிச்சயமாக அவன் அல்லாஹ்வின் மீது பொய்யுரைத்துவிட்டான். அவ்வாறு அவர்கள் கூறுகின்றவற்றில் ஏதேனும் நடைபெற்றுள்ளது என வைத்துக் கொண்டாலும் நிச்சயமாக அது பின்வரும் இரண்டு காரணங்களில் ஒன்றைக் கொண்டே நடைபெற்றிருக்க வேண்டும்.

1- அவ்வாறு நடைபெற்ற காரியம் வழமையிலேயே படைப்பினங்களின் சக்திக்கு உட்பட்ட காரியமாக இருப்பின் இது ஷைத்தான்களினூடாக நடைபெற்றுள்ளது எனக்கூறலாம். ஏனெனில் ஷைத்தான்கள் எப்போதும் கப்றுகளிடம் சமூகமளிக்கின்றனர். காரணம் அல்லாஹ்வைய ன்றி வணங்கப்படும் எந்தவொரு கப்றோ அல்லது சிலையோ அதனிடத்தில் மனிதர்களுடைய சிந்தனைகளில் பயனற்ற விளையாட்டுகளை காண்பிப்பதற்காக ஷைத்தான்கள் சமூகமளிக்கின்றனர். இறைநேசர்கள் மூலம் (அல்லாஹ்விடம்) நெருங்கும் இவர்கள் சிலை வணங்குபவர்களாக இருந்த போது ஷைத்தான் இவர்களை நேர்வழியை விட்டும் அகற்றி வழிகெடுப்பவனாக ஆகிவிட்டான். எவ்வாறு ஆரம்ப காலத்தில் சிலைகள் வணங்கக் கூடியவர்களை வழிகெடுப்பவனாக இருந்தானோ அவ்வாறே இவர்களையும் வழிகெடச் செய்கிறான். எவ்வாறெனில் அந்த ஷைத்தான்கள்

சாஸ்திரக்காரர்களிடம் நேரில் எவ்வாறு கதைக்கின்றார்களோ அவ்வாறே இவர்களிடமும், இவர்கள் யாரிடம் உதவி வேண்டுகிறார்களோ (அவ்லியாக்கள்) அவர்களின் உருவத்தில் தோன்றி பல விடயங்களை நேரில் கதைக்கின்றார்கள். அவ்வாறு நேரில் கதைக்கப்டும் காரியங்களில் சில சிலவேளை உண்மையாக இருந்தாலும் அவற்றில் அதிகமானவை பொய்யானவையே! மேலும் வழமையில் மனிதசக்திக்கு உட்பட்ட காரியங்களில் இவர்களுடைய சில தேவைகளை அந்த ஷைத்தான்கள் சில நேரம் நிறைவேற்றியும், இவர்கள் வெறுக்கின்றவற்றில் சிலதை இவர்களை விட்டும் அகற்றவும் செய்யும். அப்போது அந்தப் பெரியார், அல்லது இந்த இறைநேசர்தான் அவரின் கப்றிலிருந்து வெளியாகி அதனை செய்தார் என இந்த அப்பாவிகள் நினைப்பார்கள். ஆனால் பெரியார் அல்லது இறைநேசரைக் கொண்டு உதவி தேடும் இணைவைப்பவனை வழிகெடுப்பதற்கு உண்மையிலையே ஷைத்தான் தான் அவரின் உருவத்தில் தோன்றினான். எவ்வாறு ஷைத்தான்கள் சிலைகளுக்குள் நுழைந்து அவைகளை வணங்குபவர்களுடன் கதைத்து அவர்களின் சில தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்துள்ளனவோ அவ்வாறே. இது போன்ற நிகழ்வுகள் நடைபெற்றுள்ளதாக அதிகமான அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

2- அவ்வாறு நிகழ்ந்த காரியம் அல்லாஹ்வின் சக்திக்கு மாத்திரம் உட்பட்ட காரியமாக இருந்தால், உதாரணமாக வாழ்வளித்தல், ஆரோக்கியத்தை வழங்குதல், செல்வத்தை வழங்குதல், வறுமையை கொடுத்தல் போன்ற அல்லாஹ்வின் பிரத்தியேகத் தன்மைகளுக்குரிய

காரியங்களாக இருந்தால் இது வானங்களையும், பூமிகளையும் படைப்பதற்கு ஐம்பதாயிரம் வருடங்களுக்கு முன்பே நிச்சயமாக அல்லாஹ் எழுதிய முன்நிர்ணயத்தின் அடிப்படையிலேயே நிகழ்ந்துள்ளது. இது நிகழும் காலத்தை அல்லாஹ் இந்த நேரமாக ஆக்கியுள்ளானே தவிர இவர்கள் நினைப்பது போல் இந்த கப்றாளியிடம் பிரார்த்தித்ததின் புண்ணியத்தால் அது நிகழவில்லை. எனவே, புத்தியுள்ள மனிதன் இது போன்ற கட்டுக்கதைகளை நம்பாது, உண்மைப் படுத்தாது தன் உள்ளத்தை அல்லாஹ்வுடன் தொடர்புபடுத்தி தனது தேவைகள் நிறைவேற்றப்படுவதற்கு அவனிடமே தேவைகளை முன்வைப்பது அவசியமாகும். படைப்பினங்களின் பக்கம் தன் கவனத்தை செலுத்தக் கூடாது. ஏனெனில் படைப்பினங்கள் அறியாதவர்களாகவும், இயலாதவர்களாகவும், தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாத பலவீனமானவர்களாகவும் உள்ளதால் மனிதன் தன்னைப் போன்று படைக்கப்பட்டவரிடம் எப்படி தனது தேவைகளை கேட்க முடியும் ? சில வேளை அந்தப் படைக்கப்பட்டவர் எதையும் செவியுறவோ பார்க்கவோ முடியாத, எதையும் உடந்தையாக்கிக் கொள்ளாத ஒரு மையித்தாக இருக்கும். மேலும் அவன் தனது மேனியை மூடியிருக்கும் ஒரு துளி மண்ணைக் கூட அகற்றுவதற்கு மிகவும் சக்தியற்றவன். அப்படியாயின் இச்செயல் வழிகேடாகவும், அறியாமையாகவும், சரியான பாதையை விட்டுவிலகியதாகவு மன்றி வேறு எதுவாக இருக்க முடியும். ஆனால் ஷைத்தான் மனிதர்களுக்கு அவர்கள் செய்பவற்றை அலங்கரித்துக் காட்டுகிறான். இச்செயலைச் செய்பவன் உயர்வும், கண்ணியமுமிக்க (அல்லாஹ்வை) படைப்பாளனை புரக்கணித்துவிட்டு படைக்கப்பட்ட (மனிதனின்) பக்கம்

தேவையுடையவனாக இருப்பதே இச் செயல் கேவலமானதும், அற்பமானதும் என்பதற்குப் போதுமானது. அல்லாஹ்வின் மீது ஆணையாக இதுவே அகக்குருடும், உள்ளங்களின் மரணமுமாகும்.

## பொய்யான அற்புதங்கள்

அதிகமான மனிதர்களுக்கு மத்தியில் பல விடயங்கள் வியக்கவைக்குமளவுக்கு குழம்பியிருக்கின்றன. அவை அவர்களை நபிமார்களின் அற்புதங்கள் (முஃஜிஸாத்) மற்றும் இறைநேசர்கள், நல்லடியார்களின் அற்புதங்களின் (கராமாத்களின்) உண்மை நிலையை அறியாதவர்களாக்கி உள்ளது. ஆகவே அல்லாஹ் மக்களுக்கு அனுப்பிய தூதுத்துவத்தைப் பூரணப் படுத்துவதற்காகவும் மேலும் தனது தூதுவர்களுக்கு உதவி செய்வற்காகவும் அல்லது தனது நேசர்களாகிய உண்மையான நல்லடியார்களை கண்ணியப் படுத்துவதற்காகவும் அவனிடமிருந்து வரக்கூடிய நபிமார்களினதும், நல்லடியார்களினதும் உண்மையான அற்புதங்களுக்கு மத்தியில் பிரித்து விளங்கும் பொருட்டு அவர்கள் அந்த அற்புதங்களை சீரான முறையில் விளங்கிக் கொள்ளவில்லை. மக்களின் அறிவின்மையைப் பார்த்து ஏளனமாச் சிரிக்கவும், அவர்களின் சொத்துகளை முறையற்ற முறையில் உண்ணவும் பொய்!சொல்லி ஏமாற்றுபவர்கள் தாங்களே இட்டுக்கட்டிய நபிமார்களினதும், நல்லடியார்களினதும் அற்புதங்கள் என பெயர் சூட்டிய கட்டுக் கதைகள் மற்றும்

ஆதாரமற்ற பொய்க் கதைகளுக்கு மத்தியிலும் நபிமார்களினதும், நல்லடியார்களினதும் உண்மையான அற்புதங்களுக்கு மத்தியிலும் இருக்கும் வேற்றுமையை மக்கள் அறிந்து கொள்ளவில்லை. மக்களில் அறியாதவர்கள் நபிமார்களினதும், நல்லடியார்களினதும் அற்புதங்கள் மனித சக்திக்கு உட்பட்ட தமது விருப்பத்தின் பிரகாரம் நடைபெறும் செயல்கள் என எண்ணுகின்றனர். எவ்வாறெனில் அவர்களாகவே தமது விருப்பத்திற்குட்பட்டே இதனைச் செய்கின்றனர் என எண்ணியிருக்கின்றனர். இந்த அறியாமையால் இறைநேசர்களும், நல்லவர்களும் விரும்பிய நேரத்தில் அற்புதங்களை செய்துகாண்பிக்கும் ஆற்றலுடையவர்கள் என மக்கள் உறுதியாக நம்பியுள்ளனர். அதற்குக் காரணம் மக்கள் அவர்களின் இறைவனையும், அவர்களின் மார்க்கத்தின் உண்மை நிலையையும் அறியாமையே அன்றி வேறு இல்லை.

இந்த மக்களுக்கு நாங்கள் கூறுவது பொய்கூறி ஏமாற்றும் இவர்களால் நடைபெறுகின்றவற்றை, இந்த இறைநேசர் அல்லது அந்த இறைநேசருக்குரிய அற்புதம் என வர்ணித்துக் காட்டப்படும் அந்த காரியங்கள் அனைத்தும் பொய்யானவை. இந்த நிகழ்வுகள் அனைத்தும் ஷைத்தான்களின் கேலிக்கை விளையாட்டைச் சார்ந்தவை அல்லது அந்த யூக கற்பனை நிகழ்வுகளை இட்டுக்கட்டி அவைகளுக்கு அற்புதங்கள் என பெயர் சூட்டிச் சதிசெய்யும் ஆற்றலுடைய ஒரு புத்தியின் உருவாக்கத்தைச் சார்ந்தவையாகும். (இவ்வாறு செய்வதன் நோக்கம்) இக்கபுறாளிகளுக்கு (தர்ஹாக்களில் அடக்கம் செய்யப்பட்டவர்களுக்கு)

கௌரவத்தையும், கண்ணியத்தையும் சேர்த்து, அதனால் அவர்களுக்கு பல புண்ணியங்களை ஏற்படுத்துவதற்காகும். அதனால் மக்கள் அவர்களை கண்ணியப்படுத்துவார்கள். ஒன்றும் அறியாத அப்பாவிப் பொதுமக்கள் இக்கப்றுகளை தரிசிக்கவும், அவைகளைக் கொண்டு புண்ணியம் தேடவும், அக்கபுறாளிகளிடம் தமது தேவைகளை கேட்பதற்காகவும் உருவாக்கியிருக்கலாம். இதனால் அம்மக்கள் அக்கபுறாளிகளுக்கு பொருட்கள், அன்பளிப்புகள் என்ற பெயரில் நேர்ச்சைகள் கொண்டு வரவும், அம்மக்களை கவர்வதற்கும் இவ்வாறு செய்கின்றனர். இவ்வாறு செய்வதால் மக்களைப் பார்த்து ஏளனமாக சிரிப்பதையும், அவர்களின் பொருட்களை நியாயமற்ற முறையில் உண்ணுவதையும் நோக்கமாகக் கொண்டு தொழில் செய்ய விருப்பமற்ற, வேலையற்றவர்களுக்கு (சுகமான) வாழ்வும், ஹறாமான சம்பாத்தியமும் இருக்கிறது. மரணித்தவர் அவரின் உயிர் உடலை விட்டுப் பிரிந்து சென்று, அவரின் அசைவுகள் செயலிழந்து, அவரின் மேனியை புழுக்கள் மேய்ந்து அவரோ உக்கிப்போன எலும்பாக மாறிவிட்டதன் பின்னர் அவரால் ஏதேனும் ஒரு செயலை செய்ய முடியுமென மாசுபடாத தனது இயற்கையை பாதுகாத்து வைத்திருக்கும் எந்தவொரு புத்திசாலியாலும் நம்பவோ உண்மைப்படுத்தவோ முடியாது. இது போன்ற கேவலமான கட்டுக்கதைகளை அறியாத பாமரரைத் தவிர வேறு யார் நம்பப்போகிறார் ? ஏனெனில் அவர்கள் கூறும் இந்தக் கட்டுக்கதைகளை மரணித்தவர்கள் செய்வது எப்படிப் போனாலும் உயிருள்ளவர்கள் அவைகளை செய்வதென்பதும் சாத்தியமற்றது ! இது போன்ற கட்டுக் கதைகளை உண்மைப் படுத்துவற்காக அல்லாஹ் எமக்கு அளித்துள்ள புத்தியை செயலிழக்கச் செய்வதா ?

நிச்சயமாக பிரகாசமுள்ள ஒளிமயமான புத்தியும், மாசுபடாத இயற்கையும் இவைகள் போன்ற கட்டுக் கதைகளை உண்மைப் படுத்துவதை வன்மையாக மறுக்கிறது. காரணம் அக்கட்டுக்கதைகளில் அல்லாஹ்வினுடைய மார்க்க ரீதியான மற்றும் பிரபஞ்ச ரீதியான நடைமுறைகளுக்கு நிறையவே முரண்பாடுகள் இருக்கின்றன.

## இணைவைப்பாளர்கள் அன்றும், இன்றும்

கப்றுகள், ஸியாரத்களிடம் சென்றுவரும் மக்களில் அதிகமானோர் கூறும் ஒரு வாதம் என்னவெனில் அறியாமைக் காலத்தில் இணைவைப்பவர்கள் சிலைகளைத்தானே வணங்கிக்கொண்டிருந்தனர். ஆனால் எம்மிடமோ சில பெரியார்கள் மற்றும் நல்லடியார்களுக்குரிய கப்றுகள்தான் இருக்கின்றன, நாம் அவைகளை வணங்குவதில்லை. மாறாக அவர்களை கண்ணியப்படுத்துமுகமாக எமது தேவைகளை நிறைவேற்றித் தருமாறு அல்லாஹ்விடம் கேட்பது

மட்டும்தான். வணக்கம் என்பது வேறு, பிரார்த்தனை என்பது வேறு அல்லவா ! என்பதாகும்.

இவர்களுக்கு நாம் கூறுவது, மரணத்தவரிடம் உதவி, நற்பாக்கியம் தேடுவதும் யாதார்த்தத்தில் பிரார்த்தனையாகும். எவ்வாறு அறியாமைக் கால மக்கள் அவர்களின் சிலைகளிடம் பிரார்த்தித்தார்களோ, அதே போன்றே இது. எனவே, அக்காலத்து இணைவைப்பாளர்கள் வணங்கிய சிலைக்கும் இக்காலத்தில் மக்கள் வணங்கும் கப்றாளியின் கப்றுக்கும் (அவ்லியாக்களின் தர்ஹாக்களுக்கும்) எந்த வித்தியாசமும் இல்லை. ஏனெனில் சிலை, கப்று, தாகூத் (அல்லாஹ் அல்லாது வணங்கப்படும் அனைத்தும்) ஒரே அர்த்தத்தைக் கொண்ட வேறுபட்ட பெயர்களே. மேலும் இவை அனைத்தும் அல்லாஹ் அல்லாது வணங்கப்படுபவைகளுக்கு உபயோகிக்கப்படும் வார்த்தைகளே. அவ்வாறு வணங்கப்படுவது உயிருள்ள அல்லது மரணித்த மனிதனாகவோ அல்லது ஒரு அசையாப் பொருளாகவோ அல்லது மிருகமாகவோ அல்லது வேறு எதுவாக இருந்தாலும் சரியே. ஆரம்பகால இணைவைப்பவர்களிடம் அவர்கள் சிலைகளைக் கொண்டு நெருங்குவது மற்றும் அவைகளிடம் பிரார்த்திப்பதற்குரிய காரணம் பற்றி வினவப்பட்ட போது அதற்கு அவர்களின் பதில் எவ்வாறு இருந்தது என்பதை பின்வரும் அல்குர்ஆன் வசனம் எடுத்தியம்புகின்றது :

﴿ مَا نَعْبُدُهُمْ إِلاَّ لِيُقَرِّبُوْنَا إِلَى اللهِ زُلْفَى ﴾ سورة الزمر : 3.

எங்களை அவர்கள் நெருக்கத்தால் அல்லாஹ்வுக்கு சமீபமாக்கி வைப்பார்கள் என்பதற்காகவேயன்றி அவர்களை நாங்கள் வணங்க வில்லை. 39:3.

அதாவது எமது தேவைகள் நிறைவேற்றப்படுவதற்கு எமக்கும் அல்லாஹ்வுக்கும் மத்தியில் அவர்கள் இடைத்தரகர்களாக இருப்பதினால் தான் நாங்கள் அவர்களை வணங்குகின்றோம்.

இதிலிருந்து விளங்கவருவதாவது : ஆரம்ப அறியாமைக் கால மக்களின் வாதத்திற்கும் இன்று தாமும் முஸ்லிம்கள் எனக் கூறிக்கொள்ளும் கப்று வணங்கிகளுக்கும் இடையில் எந்த வேறுபாடும் இல்லை என்பதாகும். காரணம் அனைவரினதும் நோக்கம் ஒன்றே ! **அதாவது அல்லாஹ்வுக்கு இணைவைப்பதும், அல்லாஹ் அல்லாதவர்களிடம் பிராத்த்திப்பதுமாகும்.**

## நேசிப்பில் உண்டாகும் இணைவைத்தல்

அல்லாஹ் அல்லாது வேறு எவருக்கும் செய்யக் கூடாத அளவுக்கு அன்பு, கண்ணியம் மூலம் ஒரு படைப்பின் பக்கம்

உள்ளம் மற்றும் அனைத்து உணர்வுகளும் திரும்பி விடுவதே அந்த படைப்பிற்கு செய்யப்படும் வணக்கம் என கருதப்படும். எனவே, எவர்கள் இறைநேசர்களையும், நல்லடியார்களில் மரணித்தவர்களையும் நேசிப்பதாக கருதுகின்றார்களோ அவர்கள் மார்க்கம் அனுமதித்த எல்லையை மீறி இறைநேசர்களைக் கண்ணியப்படுத்தியும், பரிசுத்த ப்படுத்தியும் வருகின்றனர். எனவே, உண்மையில் அவர்கள் அவ்விறைநேசர்களை வணங்குகின்றனர். ஏனெனில், அவர்கள் அந்த மரணித்தவர்கள் மீது அளவு கடந்த நேசம் வைத்திருப்பதினால், அவர்களின் பக்கமே திரும்பி அவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டங்களை அனுஷ்டித்து நேர்ச்சை களைக் கொடுத்து மேலும் கஃபாவை சுற்றி வலம் வருவது போன்று அவர்களின் கப்றுகளை (தர்ஹாக்களை)ச் சுற்றி வலம் வருவதோடு அவர்களிடம் உதவியும் தேடுகின்றனர். அவர்களை பரிசுத்தப்படுத்துவதும், அவர்கள் விடயத்தில் எல்லை மீறி நடப்பதும் இல்லையென்றிருந்தால் அவர்கள் மரணித்தவர்களுக்காக அவைகளையெல்லாம் செய்திருக்க மாட்டார்கள். மேலும் அவர்கள் விஷயத்தில் எல்லை மீறி நடந்து கொள்ளும் முறைகளில் ஒன்றாக அவர்களைக் கொண்டு சத்தியம் செய்யும் போது உண்மையாளர்களாக இருக்க பேராவல் கொள்வார்கள் என்பதைக் குறிப்பிடலாம். அதேவேளை அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்யும் போது பொய்யர்களாகவும் கேளிக்கையாளர்களாகவும் இருப்பதை தவிர்ந்து கொள்ள மாட்டார்கள். மேலும் அவர்களில் சிலர் சிலவேளை அல்லாஹு தஆலாவை யாராவது திட்டுவதை செவியுற்றால் அதற்காக கோபப்படமாட்டார்கள். மேலும் அவர்களின் உணர்வுகளில் எந்த மாற்றமும் இருக்காது. அதேவேளை

அவர்களின் பெரியாரை (மகானை) யாராவது திட்டுவதை செவியுற்றால் அதற்காக கடுமையாக கோபப்படுவார்கள். அவர்கள் இவ்வாறு நடந்து கொள்வதில் அவர்கள் அல்லாஹ்வை கண்ணியப்படுத்துவத்த விட அதிகமாக அவர்களின் இறைநேசர்கள், பெரியார்களின் விடயத்தில் எல்லை மீறி நடப்பது இல்லையா ? இவர்கள், அவர்களை நேசிப்பது அல்லாஹ்வை நேசிப்பதை விட மிகையல்லவா ?

அல்லாஹு தஆலா பின்வருமாறு கூறுகின்றான் :

﴿ وَمِنَ النَّاسِ مَنْ يَتَّخِذُ مِنْ دُوْنِ اللهِ أَنْدَادًا يُحِبُّوْنَهُمْ كَحُبِّ اللهِ وَالَّذِيْنَ آمَنُوا أَشَدُّ حُبًّا لِلّهِ ﴾ سورة البقرة : 165.

மனிதர்களில் அல்லாஹ்வையன்றி அவனுக்கு இணையாளர்களை (சமமானவர்களாக) ஆக்கிக் கொண்டு, அல்லாஹ்வை நேசிப்பது போன்று அவர்களை நேசிப்பவர்களும் இருக்கின்றனர். (ஆனால்) விசுவாசிகளோ அல்லாஹ்வை நேசிப்பதில் மிக்க கடினமானவர்கள். 2:165.

இது நேசிப்பில் உண்டாகும் இணைவைத்தல் பிரிவைச் சேர்ந்ததாகும்.

## அல்லாஹ் அவனுடைய அடியார்களுக்கு நெருக்கமாக இருக்கின்றான்

நிச்சயமாக அல்லாஹ் அவனுடைய அடியார்களுக்கு நெருக்கமாக இருக்கின்றான்.

அல்லாஹு தஆலா பின்வருமாறு கூறுகின்றான் :

﴿ وَ إِذَا سَأَلَكَ عِبَادِيْ عَنِّيْ فَإِنِّيْ قَرِيْبٌ أُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ فَلْيَسْتَجِيْبُوْا لِيْ وَلْيُؤْمِنُوْا بِيْ لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ ﴾ سورة البقرة : 186.

மேலும் (நபியே) என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் (அதற்கு நீர் கூறுவீராக) நிச்சயமாக நான் (அவர்களுக்கு) மிகச் சமீபமாகவே இருக்கின்றேன். அழைப்பவரின் அழைப்புக்கு அவர் என்னை அழைத்தால் நான்

பதிலளிப்பேன். ஆகவே அவர்கள் நேரான வழியை அடைவதற்காக அவர்கள் (என்னுடைய கட்டளைகளை ஏற்று) என்னிடம் (பிரார்த்தித்துக்) கேட்கட்டும் மேலும் அவர்கள் என்னையே விசுவாசிக்கட்டும். 2:186.

ஆகவே, அல்லாஹ்விடம் உரையாடுதல், அவனின் பக்கம் திரும்புதல், அவனிடம் நேரடியாக தேவைகளை கேட்டல் ஆகியவைகளை விட்டும் அவனது அடியார்களை தடுக்க எந்தத் தடையும் இல்லை. (இவைகளை விட்டுவிட்டு) மனிதன் மரணித்தவர்களைக் கொண்டு (அல்லாஹ்விடம்) நெருங்கவும், அல்லாஹ்விடம் பரிந்து பேசுவதற்காக அவர்களிடம் பிரார்த்திக்கவும், அவர்களுக்கு அதிகாரம் இல்லாதவற்றை அவர்களிடம் கேட்கவும், மேலும் அவர்கள் சக்தி பெறாதவற்றை அவர்களிடம் வேண்டவும் மரணித்தவர்களின் கப்றுகளின் பக்கம் மனிதன் தஞ்சம் புகுவதற்கு எந்தத் தேவையுமில்லை. மாறாக மனிதன் இறைவனிடம் நேரடியாக அவனின் நாவினாலேயே கேட்பதும், மார்க்கம் அனுமதித்த நெருங்கும் முறை மூலம் இறைவனிடம் நெருங்குவதுமே மனிதனுக்குக் கடமை. மார்க்கம் அனுமதித்த நெருங்கும் முறையென்பது வழிபாடுகள், நற்கிரியைகள் கொண்டும் அல்லாஹ்வின் அழகிய திரு நாமங்கள், அவனின் உயரிய பண்புகள் கொண்டும் அவனிடம் பிரார்த்திப்பதைக் குறிக்கும். மேலும் அத்தோடு அல்லாஹ்தான் கண்ணியத்தைக் கொடுப்பவன், இழிவைக் கொடுப்பவன், வாழ்வளிப்பவன், மரணிக்கச் செய்பவன். தேவைகளை நிறைவேற்றுபவன், பயனளிப்பவன், வாழ்வில் அனைத்து விடயங்களையும்

நிருவகிப்பவன், ஏகனான அவனின் கையில் மாத்திரமே பலனும், இடையூறும் உண்டு என பூரணமாக நம்ப வேண்டும். மேலும் எந்த மனிதன் அவன் அல்லாஹ்விடமும், மனிதர்களிடமும் எவ்வளவு அந்தஸ்துக்குரியவனாக இருந்தாலும் அல்லாஹ் எழுதாத ஒன்றைக் கொண்டு எவருக்கும் நலவோகெடுதியோ செய்ய முடியாது எனவும் நம்ப வேண்டும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

وَاعْلَمْ أَنَّ الأُمَّةَ لَوِ اجْتَمَعَتْ عَلَى أَنْ يَنْفَعُوْكَ بِشَيْءٍ لَمْ يَنْفَعُوكَ إِلاَّ بِشَيْءٍ قَدْ كَتَبَهُ اللهُ لَكَ ، وَلَوِ اجْتَمَعُوا عَلَى أَنْ يَضُرُّوكَ بِشَيْءٍ لَمْ يَضُرُّوكَ إِلاَّ بِشَيْءٍ قَدْ كَتَبَهُ اللهُ عَلَيْكَ

(رواه الترمذي)

மேலும் அறிந்துகொள் முழு சமுதாயமும் ஏதேனும் ஒன்றைக் கொண்டு உனக்கு பலனளிக்க ஒன்று சேர்ந்தால் உனக்கு பலனளிக்குமென்று அல்லாஹ் எழுதிய ஒன்றைக் கொண்டே தவிர அவர்களால் உனக்கு பலனளிக்க முடியாது. மேலும் ஏதேனும் ஒன்றைக் கொண்டு உனக்கு அவர்கள் இடையூறு செய்ய ஒன்று

சேர்ந்தால் உனக்கு இடையூறு என அல்லாஹ் எழுதிய ஒன்றைக் கொண்டேயன்றி உனக்கு அவர்களால் இடையூறு செய்ய முடியாது.

(ஆதாரம் : திர்மிதி)

முழு சமுதாயமும் மனிதனுக்கு பலனளிக்கவோ அல்லது இடையூறு செய்யவோ ஒன்று சேர்ந்தால் அல்லாஹ் எழுதிய ஒன்றைக் கொண்டேயன்றி அவர்களால் அதனை செய்ய முடியாதிருந்தால் தனிமனிதன் அவன் உயிருள்ளவனாக அல்லது மரணித்தவனாக இருந்தாலும் சரி அல்லாஹ் எழுதிய ஒன்றினாலயேயன்றி பிறருக்கு அவனால் பலனளிக்கவோ, இடையூறு செய்யவோ முடியாது என்பதை கேட்கவா வேண்டும் ! அப்படியாக இருந்தால் எந்தப் பலனையும், எந்த இடையூறையும் செய்ய முடியாத ஒருவரிடம் பிரார்த்திப்பதற்குரிய காரணம் என்ன ? அது அறியாமை மற்றும் வழிகேட்டின் உச்சமேயல்லவா ? ஆம் அல்லாஹ்வின் மீது சத்தியமாக அது அறியாமை மற்றும் வழிகேட்டின் இறுதிநிலையாகும். இதனால் கப்றுகளைச் சுற்றி வலம் வருவது, அவைகளை கண்ணியப் படுத்துவது, அவைகளில் அடக்கப்பட்டிருப்பவர்களிடம் தேவைகளை நிறைவேற்றித் தருமாறும், சிரமங்களை அகற்றுமாறும் வேண்டுவது போன்ற இணைவைக்கும் செயல்கள் மற்றும் நூதன விடயங்கள், கட்டுக் கதைகளால் சோதிக்கப்பட்டு இருப்பவர்கள் இந்த தீய செயல்களிலிருந்து விடுபட்டு அல்லாஹ்விடம் மீண்டு பாவ மன்னிப்புத் தேடுவது அவசியமாகும். இது போன்ற தீய விடயங்களால் உண்மையிலேயே அல்லாஹ்வுக்கு

இணைவைக்கப்படுகின்றன. இவைகளை செய்பவன் என்றென்றும் நரகில் இருப்பான்.

**அல்லாஹ் பாதுகாக்க வேண்டும் !**

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

﴿ إِنَّهُ مَنْ يُشْرِكْ بِاللهِ فَقَدْ حَرَّمَ اللهُ عَلَيْهِ الْجَنَّةَ وَمَأْوَاهُ النَّـــارُ وَمَا لِلظَّالِمِيْنَ مِنْ أَنْصَارٍ ﴾ المائدة : 72.

நிச்சயமாக எவர் அல்லாஹ்வுக்கு இணைவைக்கின்றாரோ அவர் மீது திட்டமாக அல்லாஹ் சுவனத்தைத் தடுத்து விடுகின்றான். மேலும் அவர் தங்குமிடம் நரகம்தான். இன்னும் (இத்தகைய) அநியாயக் காரர்களுக்கு (மறுமையில்) உதவி செய்வோர் இல்லை. 5:72.

மேலும், அவர்கள் இஸ்லாத்தில் உண்மையாளர்களாக இருப்பின் தமது வாழ்வின் அனைத்துக் விடயங்களிலும் ஏகனான இணையற்ற அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதோடு, அல்லாஹ் அல்லாது வேறு எவரும் சக்தி பெறாத கருமங்களில் பிரார்த்திப்பது மற்றும் வேறு வடயங்களில் படைப்புகளில் யாராக இருப்பினும் அவரின்

பக்கம் கவனம் செலுத்தாமல் இருக்க வேண்டும். மேலும், அல்லாஹ்வின் வேதத்தையும் அவனின் தூதர் ﷺ அவர்களின் வழி முறையையும் கடைபிடிப்பதோடு, நூதன செயற்பாடுகள் மற்றும் இணைவைப்பவர்களுடன் கலந்து பழகாது இருக்க வேண்டும். காரணம் அவர்களினால் தாக்கம் பெற்று அவர்களைப் பின்பற்றி அவர்களுடன் சேர்ந்து அழிந்து, இவ்வுலகிலும், மறுமையிலும் நஷ்டமடையாது இருப்பதற்காக வேண்டியே தவிர வேறொன்றுக்குமில்லை.

**அல்லாஹ் மிக அறிந்தவன்.**

முடிவில் :

கண்ணியத்துக்குரிய சகோதர, சகோதரிகளே ! நீங்கள் இப்புத்தகத்தைப் படித்து பயனடைந்திருப்பீர்கள். அதுவே எமது எதிர்பார்ப்பு. அத்தோடு பிறர் பயன் பெறும் பொருட்டு இதனை நீங்கள் படித்த பின் வேறு சகோதர்களுக்கு அன்பளிப்புச் செய்யுமாறு நாம் உங்களை அன்பாய் வேண்டுகின்றோம். இதனால் நீங்கள் " நன்மையைக் காட்டிக் கொடுப்பவர் அதனைச் செய்தவர் போலாவார் " என்ற ஹதீஸின் சிறப்பைப் பெறுவீர்கள். நீங்கள் எமது வெளியீடுகளில் இன்னும் அதிகமானவைகளைப் பெற விரும்பினால் எமது ஸு லை இஸ்லாமிய த.ஃவா நிலையத்தை நாடலாம் அல்லது எமது முகவரியினூடாக எம்மைத் தொடர்பு கொள்ளலாம். இன்ஷா அல்லாஹ் நாம் உங்கள் சேவைக்காக காத்திருக்கின்றோம்.

**எமது தஃவா நிலையம் அமையப்பெற்றிருக்கும் இடம் :**

ஹாரூன் ரசீத் வீதி, Exit 16, ஸுலை, ரியாத்.

**எமது முகவரி :**

இஸ்லாமிய தஃவா நிலையாம், த. பெ : 1419 ரியாத் : 11431.

இப்படிக்கு :

உங்கள் சகோதரர்கள், ஸுலை இஸ்லாமிய தஃவா நிலையம், ரியாத்.

**வஸ்ஸலாமு அலைகும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு .**

ح المكتب التعاوني للدعوة والارشاد بالسلي ، ١٤٣١هـ

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

المكتب التعاوني للدعوة و الارشاد بالسلي
التوسل بالاولياء و الصالحين : المفهوم و الحكم. / المكتب التعاوني للدعوة و الارشاد بالسلي .- الرياض ، ١٤٣١هـ

..ص ؛ ..سم

ردمك: ٠-١٦-٨٠٤٨-٦٠٣-٩٧٨

(النص باللغة التاميلية)

١- التوسل ٢- التوحيد ٣- البدع في الاسلام أ.العنوان

ديوي ٢٤٠ ١٤٣١/٤٤٢١

رقم الإيداع: ١٤٣١/٤٤٢١
ردمك: ٠-١٦-٨٠٤٨-٦٠٣-٩٧٨

(ملاحظة): لا يتم طباعة الجزء الأسفل مع بطاقة الفهرسة

تأمل مكتبة الملك فهد الوطنية تطبيق ما ورد في نظام الإيداع بشكل معياري موحد ، و من هنا يتطلب تصوير الجزء الاعلى بالأبعاد المقننة نفسها خلف صفحة العنوان الداخلية للكتاب ، كما يجب طباعة الرقم الدولي المعياري ردمك مرة أخرى على الجزء السفلي الأيسر من الغلاف الخلفي الخارجي .

**و ضرورة إيداع نسختين من العمل في مكتبة الملك فهد الوطنية فور الانتهاء من طباعته ، وشكرا ،،،**

# التوسل بالأولياء والصالحين

# المفهوم والحُكم

إعداد

قسم الجاليات بالمكتب

راجعها

فضيلة الشيخ الدكتور ناصر العقل

كتب الجاليات

١٥٨ / ١٢


مكتب الدعوة بالسلي

اتف :٢٤١٠٦١٥-٢٤١٤٤٨٨ تحويلة ناسوخ ٢٣٢


السلي

# التوسل بالأولياء والصالحين

## المفهوم والحكم



راجعها فضيلة الشيخ :

الدكتور ناصر العقل

إعداد

قسم الجاليات بالمكتب


تاميلي

١٣٠١٠٥٧

حساب المكتب الموحد SA ٢٢٨٠٠٠٠٢٩٦٦٠٨٠١٠٠٧٠٥٠٩ مصرف الراجحي

Email:sulay@w.cn